**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-07042023-6255

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.01.2023

Accepted: 23.03.2023

Published: 01.04.2023

Citation:
Murugesapandian, N. "Dravidian Movement's Political Dramas." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 1–9.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6255

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Dravidian Movement's Political Dramas

**N. Murugesapandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

Even after India's independence from British colonialism, the Vedic Sanathana dominated the majority of people. The Dravida Munnetra Kazhagam criticised the ruling Congress party in Tamil Nadu. At the same time, the ideas of social reforms against the social atrocities that dominated the Tamil society of that time were depicted through political dramas. The Dravidian movement's political dramas particularly portrayed the views against the caste inequality, untouchability, gender inequality, mythological myths, and Sanskrit dominance created by the Vedic Sanathana.

**Key Words:** Tamil Nadu, Politics, Dravida Munnetra Kazhagam, Political Dramas, Social Reform, Anti-Vaidika Sanathana

## References

1. Murugesapndian, N. 2011. *Thiravida Iyakka Valartchiyil Kalangarin Nadakangal*. Chennai, V.O.C. Noolgam.

# திராவிட இயக்க அரசியல் நாடகங்கள்

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச்சுருக்கம்***

*ஆங்கிலேயரின் காலனியாதிக்கத்தில் இருந்து இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் வைதிக சநாதனம் பெரும்பான்மையினர்மீது ஆதிக்கம் செலுத்தியது. தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சியின் மீதான விமர்சனத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் முன்வைத்தது, அதேவேளையில் அன்றைய தமிழ்ச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய சமூகக் கொடுமைகளுக்கு எதிராகச் சமூக சீர்திருத்தக் கருத்துகள் அரசியல் நாடகங்கள் மூலம் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக வைதிக சநாதனம் ஏற்படுத்திருந்த சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பால் சமத்துவமின்மை, புராணக் கட்டுக்கதைகள், சம்ஸ்கிருத ஆதிக்கம் போன்றவற்றுக்கு எதிரான கருத்துக்களைத் திராவிட இயக்க அரசியல் நாடகங்கள் சித்திரித்தன.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்நாடு, அரசியல், திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் நாடகங்கள், சமூகச் சீர்திருத்தம், வைதிகச் சநாதன எதிர்ப்பு*

'வாள்முனையைவிடப் பேனா முனை கூர்மையானது' என்ற பிரெஞ்சு சிந்தனையாளரின் வால்டேரின் கூற்றினை மேடைகளில் முழங்கியும், எழுதியும் வந்த திராவிட இயக்கத்தினர் அடிப்படையில் செயல்பாட்டுவாதிகள். எழுத்தும் கலையும் திராவிடக் கருத்தியல் பிரச்சாரத்திற்குத் தொடக்கம் முதலாகவே பெரிய அளவில் பயன்பட்டன. 1967ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாடு மாநிலப் பேரவைத் தேர்தலில் வெற்றியடைந்து ஆட்சியைக் கைப்பற்றியதும் "கூத்தாடிகள் ஆட்சியைப் பிடித்து விட்டார்கள்" என்று மேனாள் முதலமைச்சர் பக்தவத்சலம் சொன்னது தற்செயலானது அல்ல. ஐம்பதுகள் காலகட்டத்தில் பெரும்பான்மை மக்கள் கல்வியறிவு பெற்றிடாத தமிழகத்தில் திராவிட இயக்கத்தினர், நிகழ்த்துக் கலையான நாடகங்கள் மூலம் திராவிட இயக்க அரசியலைப் பரப்பிட முயன்று வெற்றியடைந்தனர். அன்றைய காலகட்டத்தில் இதிகாச, புராணக் கதைகள் நாடகங்களாகத் தமிழகமெங்கும் நிகழ்த்தப்பட்டச் சூழலில், அதற்கு மாற்றாகத் திராவிட இயக்கத்தினரின் அரசியல் நாடகங்கள், சமூகப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தந்து திராவிடக் கருத்தியலைப் பிரச்சாரம் செய்தன.

காங்கிரசு இயக்கத்தின் தவறுகளைக் கண்டித்து நீதிக்கட்சியில் சேர்ந்த ஈ.வெ.ரா பெரியார், பின்னர் திராவிட இயக்கத்தைத் தொடங்கினார். திராவிட இயக்கத்தினர் தங்களுடைய கொள்கைகளைப் பரப்பிட மேடைப் பேச்சுகள், பத்திரிகைகள் போன்றவற்றுடன் நிகழ்த்துக்கலையான நாடகங்களையும் பயன்படுத்தினர்; தமிழக மக்களிடம் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பவும் அரசியல் கருத்துகளை விதைக்கவும் நாடகங்கள் மூலம் முயன்றனர். சமூகச் சீர்திருத்தம், மூடநம்பிக்கை எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, இதிகாசப் புராண எதிர்ப்பு, சாதி மறுப்பு, சடங்குகள் எதிர்ப்பு, ஜமீன்தாரி எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தனித் திராவிட நாடு, பெண் கல்வி, பெண் முன்னேற்றம், கைம் பெண் மறுமணம், தமிழ் வளர்ச்சி, சீர்திருத்த மணம், கலை

வளர்ச்சி போன்றன உள்ளடக்கங்களாகத் திராவிட இயக்கத்தினர் நிகழ்த்திய நாடகங்களில் இடம்பெற்றன.

ஈரோடு நகரில் தமிழ் மாகாண நாடகக் கலை அபிவிருத்தி மாநாடு (1944) நடைபெற்ற போது அறிஞர் அண்ணா பேசிய பேச்சு, நாடகம் பற்றிய திராவிட இயக்கத்தினரின் கருத்தைப் புலப்படுத்துகிறது: "எலும்பு பெண்ணுருவான அருட்கதைகளைப் பற்றிப் பாடியும் ஆடியும் வந்தது போதும். நமது பெண்மக்கள் எலும்புருவானது தவிரப் பயன் எதுவுமில்லை. இனிப் பெண்கள் எலும்புருவாகும் பரிதாப வாழ்வைச் சித்திரிக்கும் நாடகங்களை நடத்துங்கள். கண்ணைப் பெயர்த்தெடுத்து அப்பிய கண்ணப்பர் கதையை ஆடியது போதும். இனிக் கோயில்களில் கும்பாபிஷேகம் செய்பவன் ஊரில் கொள்ளையடிக்கும் விஷயத்தை விளக்கும் நாடகத்தை நடத்திக் காட்டுங்கள்; வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுங்கள். ஏழையின் கண்ணீர், விதவையின் துயரம், மதத் தரகர்களின் மமதை ஆகியவற்றை விளக்கும் அறிவு வளர்ச்சி நாடகங்களை நடத்துங்கள்.

திராவிட இயக்கத்தினரின் நிகழ்த்திய புராண வரலாற்று நாடகங்களில்கூட வைதிக சநாதனத்திற்கும் ஆரியத்திற்கும் எதிரான கருத்துகள் வலியுறுத்தப்பட்டன; தமிழ்ப் பண்பாட்டை நிறுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; உரையாடல்களிலும் தமிழ்மொழி நடை புதுப்புனைவுடன் வெளியானது. கலைஞர் எழுதிய 'மணிமகுடம்' நாடகத்தில் ஏழைமக்கள் வாழ்கிற வீடுகளை அழித்துவிட்டு, அங்கே பார்ப்பனர்கள் கூறியபடி கோயில் கட்டுவது என்று மன்னன் முடிவு செய்கிறான். அந்தக் கொடிக்கால் நகரத்தைக் கோயில் எழுப்புவதற்குப் பயன்படுத்தக்கூடாது என்பது நாடகத்தின் மையக் கருத்து. இதனால் புரட்சி வெடிக்கிறது. நாடகத்தில் கலைஞரின் உரையாடலுக்குச் சான்று: "நாங்கள் வெளியேறுகிறோம்! அமைச்சருக்குச் சிரமம் வேண்டாம். ஆண்டவனே ! நீ இருந்தால் கேள், இந்த அக்கிரமக்காரர்களை! அய்யோ ! ஆயிரம் வீடுகளை எரித்துவிட்டு, அங்கே நீ இருந்து சிரிக்கப் போகிறாயாமே! அடுக்குமா, உனக்கு இந்த அநியாய சொல்? சிரி, நன்றாகச் சிரி! ஏழைகளின் கண்ணீரில் நீந்திக்கொண்டே சிரி! ஏழைகள் சமுதாயமே, நீ அழு! ஆண்டவன் சிரிக்கப்போகிறான் - அந்தரத்திலே இருக்க இடமின்றித் தொங்கும் அவனுக்கு அரசாங்கத்தார் ஆடம்பரமான ஆலயம் அமைக்கப் போகிறார்கள்! ஆகவே, எதிர்க்க முடியாத ஏழையே! ஏமாற்றப்பட்ட தோழனே! நீ அழு அழு ! இளி! அஞ்சு! குனி! பிதற்று ! புலம்பு! ஒப்பாரி வை! கண்ணீர் உனக்கு மட்டுந்தான் சொந்தம் - அதை யாரும் அபகரிக்க முடியாது! ஆகவே, அழு, நண்பா அழு! உனக்கு விடுதலையே கிடையாது! இந்தச் சீமான்கள் இருக்கும்வரை! இந்தக் குருநாதர்கள் இருக்கும்வரை! உனக்கு விடுதலையே கிடையாது! விடுதலை கிடையாது!"

திராவிட இயக்கக் கருத்தியலின் முதல் நாடகமாகக் கருதப்படுவது 1934 ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில், பெரியார் தலைமையில் அரங்கேறிய பாரதிதாசனின் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" நாடகம்தான். தொன்மக் கதையை மறுவாசிப்புச் செய்து புதிய பிரதியாக எழுதப்பட்ட அந்த நாடகம் பின்னர் தமிழக அரசினால் தடைசெய்யப்பட்டது.

திராவிட இயக்கக் கவிஞரான பாரதிதாசன் அமைதி, படித்த பெண்கள், கற்கண்டு, பொறுமைகடலினும்பெரிது, இன்பக்கடல், குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும், விகட கோர்ட் போன்ற சமூக நாடகங்களையும் சேரதாண்டவம், பிசிராந்தையார்,

தலைமலை கண்ட தேவர், கழைக்கூத்தியின் காதல், சௌமியன், நல்லதீர்ப்பு, சத்திமுத்தப் புலவர், அம்மைச்சி போன்ற வரலாற்று நாடகங்களையும் படைத்திருக்கிறார். 'அமைதி' நாடகம் பண்ணையாரின் கொடுமையை எதிர்த்து எழுதப்பட்டது. கற்கண்டு நாடகத்தில் இளம்பெண்ணை முதியவன் மணந்திடும் கொடுமை எதிர்க்கப்படுகிறது. இன்பக்கடல் நாடகம் காசுக்காக ஒருத்தியையும் காதலுக்காக ஒருத்தியையும் மணந்து கொள்ள விரும்பும் ஒருவனின் முயற்சியைத் தடுத்தது. பொறுமை கடலினும் பெரிது என்னும் நாடகம் அனைவருக்கும் உபதேசம் கூறித் தன் காரியத்தில் கண்ணாக இருக்கும் பணக்காரரை மற்றவர்கள் பழிவாங்கும் நிகழ்வைச் சொல்லியது. விகடகோர்ட் என்ற நாடகம் கடவுள், சமய நம்பிக்கை போன்றவற்றைப் பகடி செய்தது. பாரதிதாசனின் நாடகங்களில் திராவிட இயக்கக் கொள்கை கள் வெளிப்பட்டன; தமிழரின் தனித்துவத்து வத்திற்கு முன்னுரிமை தரப்பட்டது.

காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சியின் மீதான விமர்சனத்துடன் அன்றைய தமிழ்ச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய சமூகக் கொடுமைகளுக்கு எதிராகச் சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் நாடகங்கள் மூலம் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக வைதிகச் சநாதனம் ஏற்படுத்திருந்த சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பால் சமத்துவமின்மை, புராணக் கட்டுக்கதைகள், சம்ஸ்கிருத ஆதிக்கம் போன்றவற்றுக்கு எதிரான விமர்சனங்களை நாடகங்கள் சித்தரித்தன. அதேவேளையில் தமிழ் மொழி, தமிழர் பற்றிய பேச்சுகளும் உரத்த குரலில் முன்மொழியப்பட்டன. அறிஞர் அண்ணாவின் எழுத்தாக்கத்தில் உருவான "சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் அல்லது சந்திரமோகன்' நாடகம் தமிழகத்தில் ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட நாடகங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு விளங்கியது.

திராவிட இயக்கத்தின் கொள்கைப் பிரச்சாரமாக அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் விளங்கின. மாவீரன் சிவாஜி மராட்டியை உருவாக்கி முடிசூட முயன்ற போது ஆரியர்கள் உண்டாக்கிய குழப்பங்களைச் சந்திரமோகன் நாடகம் விவரிக்கிறது. ஆரியச் சதிகளால் வீரம் மிக்க சமுதாயம் விழுந்து விட்டதை அண்ணா நாடமாக்கித் தமிழர்களை எச்சரிக்கிறார். சிவாஜியின் துணைவனான சந்திரமோகன் ஆரியரின் கபடம், சூழ்ச்சி குறித்துச் சிவாஜிக்கு எச்சரிக்கிறான். காகபட்டரின் சூழ்ச்சியால் மராட்டியம் ஆரியருக்கு அடிமையாகிறது. சந்திரமோகன் நாடு கடத்தப்படுகிறான். சிவாஜி உண்மையை உணர்ந்து நண்பனுடன் இணைகிறான். பகுத்தறிவை வலியுறுத்தும்வகையில் சிவாஜியின் இறுதிக் கூற்று அமைகிறது. சந்திரமோகனிடம் அவன், "வீரனே! அஞ்சா நெஞ்சு படைத்த நீ, மக்களிடம் பரவியிருக்கும் மயக்கத்தைப் போக்கு. வாளால் அரசுகளை அமைத்து விடலாம்! ஆனால் அது நிலைக்க அறிவு தேவை! அந்த ஆயுதத்தை வீசு! நாடு முழுவதும் வீசு! பட்டி தொட்டிகளில் எல்லாம் வீசு! மக்களை வீரர்களாக்கு! சந்திரமோகனா, சகலரையும் சந்திரமோகன்களாக்கு! ஜெயம் பெறுவாய்!" என்று கூறுகிறான். இந்த நாடகம் திராவிட இயக்க மாநாடுகளிலும், பிற இடங்களிலும் பல தடவைகள் நடிக்கப்பட்டது. அறிஞர் அண்ணா, காகபட்டராக நடித்தார் என்பது கூடுதல் தகவல்.

அறிஞர் அண்ணா சந்திரோதயம், வேலைக்காரி, ஓர் இரவு, காதல் ஜோதி, எதையும் தாங்கும் இதயம், பாவையின் பயணம், அவன் பித்தனா?, இரக்கம் எங்கே?, புதிய மடாதிபதி சொர்க்க வாசல், நல்லதம்பி, கண்ணீர்த்துளி, கண்ணாயிரத்தின் உலகம் முதலான சமூக நாடகங்களை எழுதியிருக்கிறார். சந்திரோதயம் நாடகம், ஜமீன்தார்களின் கொடூர நடத்தைகளையும் மடங்களில் நடக்கும் கயமையையும் பிறரை ஏய்த்துப் பிழைக்கும்

பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் காட்டுகிறது. வேலைக்காரி நாடகத்தில் சாதிப் பற்று, பணத்திமிர், பொருளாதார ஏற்றத்தாழ்வு, கடவுள் நம்பிக்கை, பெண்களின் அவல நிலை இடம் பெற்றுள்ளன. "கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு', "சட்டம் ஓர் இருட்டறை, அதிலே வக்கீலின் வாதம் ஓர் விளக்கு' போன்ற அண்ணாவின் நாடக வசனங்கள் குறிப்பிடத்தக்கன

திராவிடர் இயக்க அரசியலை முன்வைத்த நாடகங்கள், கோவில் திருவிழாக்களில் புராண நாடகங்களைப் பயபக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்த தமிழர்களிடம் அன்றாடப் பிரச்சினைகளைப் பேசி விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதனால், வைதிக சநாதன ஆதிக்க எதிர்ப்பும் பகுத்தறிவு அடிப்படையிலான கருத்தியல் போராட்டங்களும் நாடகம் மூலம் நிகழ்த்துக் கலையாகிடமுடியும் என்ற நிலை உருவானது. என்.எஸ்.கிருஷ்ணன் மெல்லிய நகைச்சுவை மூலம் சமூக விமர்சனக் கருத்துக்களை நாடகமாக்கிட முயன்றதற்கு எடுத்துக்காட்டு அவருடைய "நல்லத்தம்பி" நாடகம். அவர், பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் காந்தியத்தையும் ஒத்திசைந்து செல்கிற போக்கை நாடகம் நிகழ்த்துவதில் பின்பற்றினார். வைதிகச் சநாதன வருணாசிரம நெறிக்கு மற்றாக நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் உயர்த்திப் பிடித்தார் என்.எஸ்.கிருஷ்ணன் என்பதற்கு அடையாளம் "கிந்தனார்" சமூக அங்கத நாடகம்.

திருச்சி நாடாளுமன்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் 010.6.2009 அன்று கலைஞரின் பேச்சு: "நான் நாடகம் ஆடியவன் தான். இளமைப் பருவத்தில் 'உதயசூரியன்' நாடகம், 'காகிதப் பூ' நாடகம் என்றெல்லாம் நாடகமாடி, அண்ணாவும் நானும் சேர்ந்தே நாடகம் ஆடித்தான் இந்தக் கட்சியை வளர்த்தோம். நாங்கள் மேடை போட்டு நாடகம் ஆடினோம். அவர்கள் நாட்டு மக்களிடத்திலே நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் வித்தியாசம். அவர்களுடைய நாடகம், அவர்களுடைய வருமானத்திற்காக, அவர்களுடைய வாழ்விற்காக, நாங்கள் பதவிகளை இழந்து, பவிசுகளை இழந்து, பணம் இழந்து, எங்களுடைய பலத்திலே ஒரு பகுதியை இழந்து, உடல் இளைத்து ஊர் சுற்றி நாடகங்கள் ஆடி. இந்தக் கட்சியை வளர்த்தோம்".

1944-ஆம் ஆண்டு 'திராவிட நடிகர் கழகம்' என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட நாடகக் குழுவினரின் முதல் நாடகமாகக் கலைஞரின் 'பழனியப்பன்' நாடகம் நிகழ்த்தப்பட்டது. கலைஞர், தான் எழுதும் நாடகத்தில் மட்டும் நடிப்பது என்ற நிபந்தனையுடன் நடித்தார். வைதிகச் சநாதனம், மூட நம்பிக்கைக்கு எதிரான கலகக்குரல் 20 வயதில் கலைஞர் எழுதிய பழனியப்பன் நாடகத்தில் வெளிப்பட்டுள்ளது தற்செயலானது அல்ல. நாடகமும் அரசியலும் இரு கண்கள் என்று தன்னுடைய இளம்வயதில் ஆர்வத்துடன் செயல்பட்ட கலைஞரின் பொருளியல் நிலை வளமற்று இருந்தது. அவருடைய இரண்டாவது திருமணம் 1948ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் நடைபெற்றது. திருமணச் செலவினங்களை ஈடுகட்டும் வகையில் திருச்சி நகரில் அண்ணா தலைமையில் 'தூக்குமேடை' நாடகம் நிகழ்த்தப்பட்டது. நாடகத்திற்கு வசூலான எண்ணூறு ரூபாய்கள் திருமணச் செலவிற்குப் பயன்படுத்தப்பட்டன.

அறுபதுகளில் எளிய மக்களின் அன்றாட வாழ்க்கை, புயலினால் பெரும் பாதிப்பிற்குள்ளானபோது, திராவிட முன்னேற்றக் கழகம், கலைஞர் தலைமையில் குழு அமைத்தது. புயலின் சீற்றத்தினால் நலிவடைந்த மக்களுக்குக் கைத்தறி வேட்டி, சேலை, துண்டு வழங்கிடுவதற்காக ரூ.25,000/- நிதி திரட்டப்பட்டத்தில், நாடகங்கள் பெருமளவில் உதவின. நிதி

திரட்டுவதற்காகக் கலைஞரின் 'தூக்குமேடை' நாடகம் நிகழ்த்தப்பட்டது. கலைஞர் பாண்டியனாகவும் சிவாஜி அபிநயசுந்தரராகவும் வேடமேற்றுச் சிறப்பாக நடித்தனர்.

தி.மு.க. நடத்திய கட்சி மாநாடுகளின் இறுதியில் கட்சித் தோழர்கள் கண்டு களிப்பதற்காக நடத்தப்பட்ட அண்ணா, கலைஞரின் நாடகங்கள், கருத்தியல் பிரச்சாரத்துடன் நிதி திரட்டவும் உதவின. இரவுவேளையில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் நாடகங்களைக் கண்டு ரசித்தனர்.

தி.மு.க. விற்கு நிதி திரட்டும் பணியில் கலைஞர் எழுதிய 'உதயசூரியன்' நாடகம் சிறந்த கருவியாகப் பயன்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளின் செலவினங்களைச் சமாளிக்கக் கலைஞர் 'உதயசூரியன்' நாடகத்தை நடத்தி, நிதி திரட்டி தோழர்களுக்கு வழங்கினார். நாடகம் என்ற நிகழ்த்துக் கலைமூலம் தி.மு.க.வினர் செய்த கருத்தியல் பிரச்சாரத்திற்கு ஐம்பது அறுபதுகளில் தமிழகத்தில் பெரிதும் வரவேற்பிருந்தது. கலைஞர் அன்று இந்திய ஒன்றியத்தையும் தமிழ்நாட்டினையும் ஆண்ட காங்கிரஸ் கட்சிக்கு எதிராகத் தீவிரமான பிரச்சாரத்தினை நாடகங்கள் மூலம் மேற்கொண்டார். இது, ஆளும் கட்சிக்கு இடையூறாக இருந்தது. எனவே கலைஞர் எழுதிய "தூக்குமேடை, காகிதப்பூ போன்ற நாடகங்கள் காங்கிரஸ் அரசினால் தடை செய்யப்பட்டன. கலைஞர், தன்னுடைய 26 வயதில் எழுதிய தூக்குமேடை நாடகத்தை ஆளும் அரசாங்கம் தடை செய்த நிகழ்வு, கருத்தியல்ரீதியில் அவருடைய அரசியல் செயல்பாட்டின் வெளிப்பாடாகும். அப்பொழுது 25.10.1950 அன்று தி.மு.க தலைமைச் செயற்குழு கூடி,. "தடை செய்யப்பட்ட நாடகங்களைத் தடையை மீறி நடத்த, ஒவ்வொரு மாவட்டமும் திட்டம் வகுத்து நடிகர் குழு அமைத்து, தலைமை நிலையத்திற்கு நவம்பர் இறுதிக்குள் தெரியப்படுத்த வேண்டுமென்று மாவட்டச் செயலாளர்களைக் கேட்டுக் கொள்கின்றது. என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்தியா விடுதலையடைந்து நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவும் தி.மு. கழகம் தொடங்கப்பட்ட ஓராண்டிற்குள்ளும் கலைஞரின் நாடகங்கள் நடத்தத் தடை ஆளும் அரசினால் விதிக்கப்பட்டது என்ற செய்தியானது, நாடகம் குறித்த காங்கிரஸ் அரசின் எதிர்மறையான அணுகுமுறையைக் காட்டுகின்றது. இந்திய நாடு விடுதலையடைந்த பின்னர், நாடகங்களைத் தடை செய்யும் சட்டமான 1954- நாடகம் நிகழ்த்துதல் சட்டம் தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக நடைமுறைக்கு வந்தது. இது திராவிட இயக்கங்களின் நாடக முயற்சிகளுக்கு எதிராக அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் கொண்டிருந்த கருத்தியல் எதிர்ப்பின் வெளிப்பாடாகும். தி.மு.க.வினர் தடை செய்யப்பட்ட நாடகங்களை வேறு பெயர்களில் நடத்தினர். 'நாடகம் நிகழ்த்துவது' தி.மு.க.வினரின் போராட்ட ஆயுதமாக மாறியதை அறியமுடிகிறது.

கலைஞர் எழுதிய 'காகிதப்பூ' நாடகம் தேர்தல் நிதி திரட்டுவதற்காக 1966-ஆம் ஆண்டில் தமிழகமெங்கும் பல இடங்களில் நடத்தப்பட்டது. கட்சித் தோழர்களுடன் பொது மக்களும் காகிதப்பூ நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். காகிதப்பூ நாடகம் நிகழ்த்துவதன்மூலம் கிடைத்த பணமானது, தி.மு.க.வின் தேர்தல் நிதியாகப் பயன்பட்டது. காகிதப்பூ நாடகம் மூலம் ஒரே நாளில் திருச்சியில் ரூ.13 ஆயிரம், கடலூரில் ரூ.6 ஆயிரம், கள்ளக்குறிச்சியில் ரூ.10 ஆயிரம், மன்னையில் ரூ.12 ஆயிரம், தஞ்சையில் ரூ.10 ஆயிரம் ரூபாய் வசூலானது.

திண்டிவனத்தில் நடைபெற்ற காகிதப்பூ நாடகம் மூலம் ஒரே நாளில் ரூ.13,250 வசூலானது. நாடகத்தின் மூலம் வசூலான தொகையானது, அன்றைய காலகட்டத்தில் மிகப்பெரியது

கலைஞர் 1969ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல்வராகப் பொறுப்பேற்று ஆட்சி செய்த போது சோ எழுதிய 'முகமது பின் துக்ளக்' நாடகம், திராவிட இயக்க அரசியலின் மேம்போக்கான அம்சங்களையும் பகட்டுத்தனங்களையும் கேலி செய்தது. சோவின் நாடகத்திற்கு எதிராகக் கலைஞர் 'நானே அறிவாளி' என்ற பெயரில் அங்கதமாக நாடகமெழுதி, நிகழ்த்திட ஏற்பாடு செய்தார். தமிழகத்தின் முதல்வராக எம்.ஜி. ராமச்சந்திரன் செயல்பட்டபோது எதிர்க்கட்சி தலைவராகச் செயல்பட்ட கலைஞர், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் சமூக விரோதச் செயல்களையும் சீரழிவுகளையும் அம்பலப்படுத்தும் அரசியல் நோக்கில் 'புனித ராஜ்யம் என்ற நாடகத்தை 1979 ஆம் ஆண்டில் எழுதி நிகழ்த்தினார்.

"தி.மு.க. தமிழக ஆட்சியைக் கைப்பற்றிட கலைஞரின் நாடகங்கள் முக்கியக் காரணியாக விளங்கியுள்ளன. கலைஞர் எழுதிய "காகிதப்பூ" நாடகத்தைப் பற்றி 07.02.67 நாளிட்ட டைம்ஸ் ஆங்கில பத்திரிகையில் 'விழாக் கோலத்தில் சென்னை' என்ற கட்டுரையில் பிரசுரமான பகுதியின் தமிழாக்கம் பின்வருமாறு: தமிழக ஆட்சியின் எதிர்ப்புச் சக்திகளில் முன்னணியில் நிற்பது திராவிட முன்னேற்றக்கழகம். அது தேர்தல் பிரச்சாரம் செய்யும் முறையே வேறானது. மிகப்பெரிய திடல் ஒன்றின் மூலையில் திரளான மக்கள் அமர்ந்து திறந்தவெளி அரங்கில் நடைபெறும் ஒரு நாடகத்தைப் பார்க்கிறார்கள். அதனைப் பார்த்துவிட்டு உள்ளம் உருகுகிறார்கள். மனம் திறந்து வாய்விட்டுச் சிரிக்கிறார்கள்... இந்த நாடகம் 'காகிதப்பூ'. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஒருவரால் எழுதப்பட்டுத் தமிழகம் முழுவதும் நடிக்கப்படுவதாகும். கதராடை உடுத்தி, உழைப்பின் சிறப்புப் பற்றிய போலிப் பேச்சுக்களால் மக்களை மயக்கி வாக்குகள் பெற முயலும் காங்கிரஸ்காரர்களாக இந்த நாடகத்தின் வில்லன், நகைச்சுவைப் பாத்திரங்கள் காட்டப்படுகின்றன." கலைஞரின் அரசியல் நாடகத்தினுக்கு அன்று மக்களிடையே இருந்த செல்வாக்கினைப் பத்திரிகை விமர்சனம் சரியாகக் கணித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரும் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னரும் ஆட்சியைவிட்டு விலகியபோதும் தன்னுடைய அரசியல் கருத்தியலை வெளிப்படுத்துவதற்காக நாடகத்தைத் தொடர்ந்து கலைஞர் பயன்படுத்தியுள்ளார். நாடகம் என்னும் ஊடகத்தைக் கருத்தியல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திய திராவிட நாடக ஆசிரியர்களில், கலைஞர் தனித்துவமானவர்.

பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளுக்கு நாடக வடிவம் கொடுத்து தமிழ்நாடு முழுவதும் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தவர் எம் ஆர் ராதா. அவர், நாடகத்தில் ஏற்படுத்திய கலகப் பண்பாடு, திராவிட இயக்க நாடக வரலாற்றில் ஒப்பீடு அற்றது. எம். ஆர். ராதாவின் ராமாயண நாடகம் பெரியார் தலைமையில் 1954 ஆம் ஆண்டு சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் அரங்கேறியது. வால்மீகி ராமாயணம் உள்ளிட்ட பல்வேறு ராமாயணங்களிலிருந்தும் தனது நாடகத்துக்கான ஆதாரங்களை மேற்கோள்களாக எழுதி அரங்கின் வாயிலில் வைத்து, சநாதனவாதிகளின் வாயை அடைத்தார், எம்.ஆர். ராதா. பார்ப்பனர்களால் ராதாவின் நாடகத்தைக் கீமாயணம் என்று சொல்ல முடிந்ததேயன்றி அவரை மறுக்க முடியவில்லை. ஆறு வாரங்கள் சென்னையில் ராமாயணம் நாடகம்

நடத்திய பிறகு திருச்சி நகருக்குச் சென்றார் ராதா. "என் ராமாயண நாடகம் இந்துக்களின் மனதை புண்படுத்துகிறது என்று கருதுகிறவர்கள் கண்டிப்பாய் என் நாடகத்திற்கு வர வேண்டாம். அவர்கள் காசும் எனக்கு வேண்டாம். மீறி வந்து பார்த்தால், அவர்கள் மனம் புண்பட்டால் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல என்பதைக் கண்டிப்பாய் அறியவும்" என்று விளம்பரத்தட்டியை வெளியே வைத்துவிட்டு 18.12.54 அன்று திருச்சி ரத்தினவேல் தேவர் மன்றத்தில் தடையை மீறி நாடகம் நடத்த முயன்ற போது எம். ஆர். ராதா வீட்டிலேயே கைது செய்யப்பட்டார்.

எம்.ஆர்.ராதா நடித்த கருணாநிதி எழுதிய "தூக்குமேடை" நாடகம், பார்ப்பனர்களின் சூழ்ச்சி, மிராசுதாரர்களின் காமக் களியாட்டங்கள், நேர்மையானவர்களின் காதலைத் தோற்கடிக்கும் பொய்ச் சாட்சிகள் போன்றவவற்றை அம்பலப்படுத்தியது. தூக்குமேடை நாடகம் தஞ்சையில் நிகழ்ந்தபோது பண்ணையாருடைய பெயரை வேண்டுமென்றே "தென்பாதி மங்கலம் தியாகராஜ முதலியார்" என வைத்தார் எம்.ஆர். ராதா. கீழத்தஞ்சையில் வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் எம்.ஆர். ராதாவிடம் வெளிப்பட்ட துணிச்சல் அசாத்தியமானது.

முரண்பாடான செயல்பாடுகளும் அடாவடியான நடத்தையும் மிக்கவனைக் கதாநாயகனாக்கிய ரத்தக் கண்ணீர் நாடகம், எம்.ஆர்.ராதாவின் நாடகங்களில் பிரபலமானது. ரத்தக்கண்ணீர், கதாநாயகனை நன்மைகளின் ஒட்டுமொத்தமாகவும் பலவீனங்கள் அற்றவனாகவும் வில்லனைத் தீமைகளின் திரண்ட வடிவமாகவும் சித்தரிக்கிற நாடக மரபைத் தகர்த்தது. கதாநாயகனே வில்லனாகிறான்; வில்லனே நல்லதைச் சொல்கிறான்; நல்லவர்களிடம் பொதிந்திருக்கும் பழமையைப் பகடி செய்கிறான். நாடகத்திற்கான வசனத்தை எழுதியவர் திருவாரூர்கே. தங்கராசு.

எம்.ஆர். ராதா கும்பகோணம் நகரில் நாடகம் நடத்திய போது ராமன் வேடத்திலேயே கைதானார். காவல்துறையினர், "ராமன் வேடத்தைக் கலையுங்கள்" எனக் கூறியபோது அவர், "வேடம் கலையாது, வில் கீழே விழாது, கலசம் கீழே வராது" எனக் கூறி, ஒரு கையில் கள்ளுக் கலயமும், மறுகையில் சிகரெட்டுமாகக் காவல் நிலையம் நோக்கி நடந்தார். வீதியையும் நிகழ்த்துக் கலை மேடையாக்கும் வித்தை அவருக்குத் தெரிந்திருந்தது. தமிழ்நாட்டில் நாடகங்கள் நிகழ்த்தியதற்காக அடக்குமுறைகளை எதிர்கொண்டபோதும் திராவிட இயக்கத்தினர் துணிச்சலுடன் செயல்பட்டனர். சுதந்திர இந்தியாவில் அரசியல் நாடகங்கள் தடை செய்யப்பட்டதும் அடக்குமுறை ஏவிவிடப்பட்டதும் திராவிடர் இயக்க நாடகங்களுக்குப் பெரிய அளவில் நடந்தன.

திராவிட இயக்கத்தில் இணைந்து செயலாற்றியவர்கள் எழுதி, நிகழ்த்தப்பட்ட நாடகங்களின் எண்ணிக்கை அளவற்றவை. அந்த நாடகங்கள் பார்வையாளர்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தின. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியர்களும் நாடகங்களும் பின்வருமாறு: ப. கண்ணன் - மின்னொளி, நந்திவர்மன், பகைமை வென்றான், பாண்டிய மகுடம்; ஏ.கே.வேலன் -கைதி, எரிமலை, சூறாவளி; சாம்பாஜி, கங்கைக்கு அப்பால், காவேரிக் கரையினிலே; சி.பி.சிற்றரசு - தங்க விலங்கு, போர்வாள், இரத்தத் தடாகம்; தில்லை வில்லாளன் - ஆரியரின் வஞ்சம், தமிழர்களின் எழுச்சி; பேசும் ஓவியம், திரை ; எஸ்.எஸ்.தென்னரசு - சந்த மழை; கே.ஜி.இராதாமணாளன் - அரக்கு மாளிகை; ஏ.வி.பி, ஆசைத்தம்பி - வாழ்க்கை வாழ்வதற்கே ;கே.ஏ. மதியழகன்

-பவள நாட்டு எல்லை; முரசொலி மாறன் - நாளை நமதே, ஊஞ்சல் மனம், அபாய விளக்கு; இரா. செழியன் - காணிக்கை, போராட்டம், சமீன் மாளிகை; முரசொலி சொர்ணம் - விடைகொடு தாயே, முரசொலி அடியார் - அண்ணா ஒரு காவியம், தென்திசை தீபம்; கண்ணதாசன் - சிவகெங்கைச் சீமை, ராஜ தண்டனை. இந்தப் பட்டியல் இன்னும் நீளும்.

ஐரோப்பிய யதார்த்த வகையிலான நாடகங்களின் வடிவத்தோடும் கூர்மையான உரையாடல்களும் விறுவிறுப்பான காட்சி அமைப்புகளும் கொண்ட திராவிட இயக்க நாடக மரபு, தி.மு.க. தமிழக ஆட்சியைக் கைப்பற்றியதும் மெல்ல நசிவடைந்தது. வருணாசிரமத்தையும் பார்ப்பனியத்தையும் கேள்விக்குள்ளாக்குவது என்பது ஒருவகையில் ஆயிரமாண்டுகளாக நிலவிவரும் ஆதிக்கக் கருத்தியலை விமர்சிப்பதுதான். திராவிட இயக்கத்தினரின் நாடகங்கள் வைதிகச் சநாதனம், கோவில்கள், கோவில்கள் சார்ந்த பார்ப்பனியத்தின்மீது அழுத்தமான கேள்விகளை முன்வைத்தன. அவற்றை ஏற்க மறுத்த தமிழ்ச் சிறுபத்திரிகை மரபு முன்வைத்த நவீன நாடகம் என்ற கோட்பாட்டில் நவீனப் பார்ப்பனியம் பொதிந்துள்ளது. வெகுஜனரீதியில் காத்திரமான உரையாடல்கள் மூலம் பிரபலமாக விளங்கிய திராவிட இயக்க நாடக மரபு அறுபட்டுப் போவதற்கு ஆதிக்கக் கருத்தியலாளர்களும், சார்பு நிறுவனங்களும் திட்டமிட்டுச் செயலாற்றினர். புதுமை, வடிவத் தேடல், சோதனை, பரிசோதனை என்ற பெயரில் ஃபோர்டு பவுண்டேஷன், ஐரோப்பிய நாட்டுத் தூதரகங்கள், சங்கீத நாடக அகாதெமி போன்றவற்றின் நிதியுதவி பெற்றுச் செயல்பட்ட கூத்துப்பட்டறை போன்ற அமைப்புகள், நாடகம் என்ற பலம் வாய்ந்த கலை ஊடகத்தின் சமூகச் செயல்பாடுகளைச் சிதலமாக்கிவிட்டன. நாடகம் என்ற நிகழ்த்துக்கலை வடிவத்துடன் திரைப்படத் துறையிலும் செல்வாக்குடன் விளங்கிய திராவிட இயக்கத்தினர் காலப்போக்கில் திரைப்படங்களுக்கு முன்னுரிமை தந்தனர். அதேவேளையில் திராவிட இயக்கத்தினர் ஆட்சி அதிகாரத்திற்குள் நுழைந்தவுடன் தங்களுடைய நாடக முயற்சிகளைக் கைவிட்டனர் என்பதும் உண்மைதான்.

## சான்றாதாரம்

1. முருகேசபாண்டியன், ந. 2022. *திராவிட இயக்க வளர்ச்சியில் கலைஞரின் நாடகங்கள்.* சென்னை: வ.உ.சி.நூலகம்.